TAMILTH Tiruchirapalli 1 Regional_02 G SURESH 221243 HT166128

சின்ன சின்னதாய்

திருச்சி மாவட்டத்தில் 8 காவல் நிலையங்கள் தரம் உயர்வு

■ திருச்சி

திருச்சி மாவட்டத்தில் 8 காவல் நிலையங்கள் உதவி ஆய்வாளர் நிலையில் இருந்து ஆய்வாளர் நிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 280 காவல் ஆய்வாளர் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, உதவி ஆய்வாளர் தலைமையில் செயல்பட்டு வந்த 280 காவல் நிலையங்கள், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் நிலையங்களாக நேற்று தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டன.

இதன்படி, திருச்சி மாவட்டத்தில் மணிகண்டம், பேட்டைவாய்த்தலை, கல்லக்குடி, கொள்ளிடம், காட்டுப்புத்தூர், உப்பிலியபுரம், புத்தாநத்தம், வளநாடு ஆகிய காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டன.

● திருவானைக்காவல் மேல கொண்டையம்பேட்டை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்க 5 எண்ணிக்கையிலான 'இந்து தமிழ் திசை' நாளிதழுக்கான ஓராண்டு சந்தா தொகையை ராக்சிட்டி ரோட்டரி கிளப் சார்பில் பள்ளித் தலைமையாசிரியர் மருதவாணனிடம் வழங்கிய பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் விஸ்வேஸ்வரன்.

பெரம்பலூரில் அனைத்துவகை ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

■ பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "பெரம்பலூர் மாவட்டத்தில் இயக்கப்படும் 450–க்கும் அதிகமான அனைத்துவகையான பயணிகள் ஆட்டோக்களுக்கும், மானியத்தில் இயற்கை எரிவாயு (சி.என்.ஜி) கலன் பொருத்த வேண்டும். புதிய ஆட்டோக்களுக்கு சி.என்.ஜி. பர்மிட் வழங்கக் கூடாது" ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்கத்தின் மாவட்டத் தலைவர் பெரியசாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் திரளானோர் பங்கேற்றனர்.



● திருச்சி தென்னூர் சுப்பையா பள்ளியில் ஏஐ பயன்படுத்தி கற்பித்தல் பயிற்சி வகுப்பில் பங்கேற்ற ஆசிரியருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

ஏஐ மூலம் கற்பித்தல் குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி

■ திருச்சி

திருச்சி தென்னூர் சுப்பையா நினைவு நடுநிலைப் பள்ளியில், ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பிப்பது தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சி நேற்று நடைபெற்றது.

புதுச்சேரி யுனிவர்சல் டீச்சர் அகாடமி சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் சைமன் பீட்டர் பால், இந்தப் பயிற்சி வகுப்பை நடத்தினார். அப்போது, செயற்கை நுண்ணறிவு, அதன்மூலம் மாணவர்கள் தங்களது பாடங்களை விரைந்து கற்க உதவும் வீடியோ உருவாக்குதல், சில விநாடிகளில் பாடப் புத்தகங்களில் இருந்து கேள்வி– பதில்கள் தயாரித்தல் ஆகியன குறித்து விளக்கினார். மேலும், பாடல் வரிகளை எழுதுதல், அந்தப் பாடல் வரிகளுக்கு சில விநாடிகளில் குரல், இசை உருவாக்குதல், ஒரு படத்தை பேச வைப்பது எப்படி? என்பன குறித்து பயிற்சி அளித்தார். இந்தப் பயிற்சி வகுப்பில் கல்லூரி விரிவுரையாளர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 100–க்கும் அதிகமானோர் பங்கேற்றனர். பயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மணப்பாறை வட்டார கல்வி அலுவலர் அர்ஜுன் சான்றிதழ்களை வழங்கினார்.

தாந்தோணிமலையில் இடுகாடு அமைக்க இடம் தேர்வு செய்து கொடுக்க கோரிக்கை

■ கரூர்

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம் நேற்று நடைபெற்றது.

தமிழக அரசின் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புத்தாக்க கண்டுபிடிப்புக்காக மாநில அளவில் 3-ம் பரிசு பெற்ற மண்மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 4 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்கள், கருணை அடிப்படையில் ஒருவருக்கு சத்துணவு அமைப்பாளர் பணி நியமன ஆணை, மாற்றுத் திறனாளி மாணவருக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒதுக்கீடு ஆணை உள்ளிட்டவற்றை ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், கரூர் காந்திகிராமம் இஸ்லாமிய இலக்கிய அறக்கட்டளை பள்ளிவாசல், மஜ்ஜிதே ஸாலிஹீன் சுன்னத் வல் ஜமாஅத் மற்றும் மதரஸா பள்ளிவாசல் ஆகியவற்றை சேர்ந்தோர் அளித்த மனு: கரூர் மாநகராட்சி பகுதியில் முஸ்லிம்களுக்கான இடுகாடு ஒரு இடத்தில் மட்டுமே உள்ளது. மாநகரப் பகுதியைச் சேர்ந்த சில பகுதிகளில் இருந்து அங்கு செல்ல 10 கி.மீ. முதல் 13 கி.மீ. வரை தொலைவு உள்ளதால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, தாந்தோணிமலை பகுதியில் முஸ்லிம்களுக்கு மற்றொரு இடுகாடு அமைக்க உரிய இடத்தைத் தேர்வு செய்து வழங்க வேண்டும்.

அரசுப் பள்ளிகளில்

மெய்நிகர் வகுப்புகளை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவுறுத்தல்

■ கரூர்

அனைத்து அரசுப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மெய்நிகர் வகுப்புகளை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும் என பள்ளி கல்வித்துறை அமைச்சர் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

கரூர் மாவட்டத்தில் மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்தும் நோக்கில், மாவட்ட அடைவுத் திறன் மீளாய்வுக் கூட்டம் தளவாபாளையம் தனியார் பொறியியல் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. ஆட்சியர் மீ.தங்கவேல் முன்னிலை வகித்தார். ஆய்வுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியது:

கரூர் மாவட்டத்தில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3, 5, 8 ஆகிய வகுப்புகளுக்கு பிப்ரவரி மாதம் எஸ்எல்ஏஎஸ் 2025 ஆய்வு நடைபெற்றது. இதில், 3-ம் வகுப்பில் 92.33 சதவீதம், 5-ம் வகுப்பில் 95.02 சதவீதம், 8-ம் வகுப்பில் 93.09 சதவீதம் பங்கேற்பு வீதம் பதிவாகியுள்ளது. மாநில தர வரிசையில் கரூர் மாவட்டம் 3-ம் வகுப்பில் 32-வது இடம், 5-ம் வகுப்பில் 29-வது இடம், 8-ம் வகுப்பில் 25-வது இடத்தைப் பெற்றுள்ளது. மொத்தத்தில் கரூர் மாவட்டம் 30-வது இடத்தைப் பெற்றுள்ளது.

அடுத்த கல்வியாண்டில் இதில் முன்னேற்றம் காணும் வகையில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த ஆசிரியர்கள் பாடுபட வேண்டும்.

மேல்நிலைப் பள்ளிகளுக்கு இடையே கடவூர் ஒன்றியம் மாவத்தூர் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி 79.6 சதவீத அடைவுத் திறனுடன் முதல் இடத்தையும், தொடக்கப் பள்ளிகளில் க.பரமத்தி ஒன்றியம் மோளப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி 97.5 சதவீதத்துடன் முதல் இடத்தையும் பெற்றுள்ளன.

அனைத்து அரசுப் பள்ளி மாணவ- மாணவிகளுக்கு மெய்நிகர் வகுப்புகளை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் கரூர் மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் 520 பேர் பங்கேற்றனர்.

ஆய்வுக் கூட்டத்தின்போது, கற்றல் அடைவுத் திறன் அதிகரிப்பது தொடர்பாக தலைமை ஆசிரியர்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொறுப்பு) ப.க.செல்வமணி, மாவட்டக் கல்வி அலுவலர் ம.முருகேசன், ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் ம.ராஜ்குமார், கரூர் கோட்டாட்சியர் முகமது பைசல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

● கரூரில் நேற்று நடைபெற்ற மாநில அளவிலான அடைவுத் தேர்வு ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

உழவர் நல சேவை மையம் அமைக்க வேளாண் பட்டதாரிகளுக்கு அழைப்பு

■ திருச்சி

திருச்சி மாவட்ட வேளாண் பட்டதாரிகள் "முதல்வரின் உழவர் நல சேவை மையம்" அமைக்க அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக வேளாண் மாவட்ட இணை இயக்குநர் வசந்தா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் 1,000 உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும் என அரசு பட்ஜெட்டில் அறிவித்தது. இதன்படி, மாவட்டங்களில் உழவர் நல சேவை மையங்களை தொடங்க இலக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயனாளிகளைத் தேர்வு செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் 16 உழவர் நல சேவை மையங்கள் தொடங்கப்பட உள்ளன.

தமிழகத்தில் ஆண்டுதோறும் 5,000 பேர் வேளாண்மையில் பட்டம் அல்லது பட்டயப் படிப்பை நிறைவு செய்கின்றனர். இவர்களின் தொழில்நுட்ப அறிவை விவசாயிகளுக்கு பயன்படுத்தும் வகையிலும், வேளாண் பட்டதாரிகளை தொழில்முனைவோராக்கும் முயற்சியாகவும் உழவர் நல சேவை மையங்கள் ரூ.42 கோடியில் தொடங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் தொழில் முனையும் வேளாண் பட்டதாரிகள் ரூ.10 லட்சம் அல்லது ரூ.20 லட்சம் மதிப்பில் விதைகள், உரங்கள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் விற்பனை மையம், நோய் மற்றும் பூச்சி மேலாண்மை, மதிப்புக்கூட்டு பொருட்கள், வேளாண் உயர் தொழில் நுட்பம் மற்றும் இதர வேளாண் சார்ந்த பிரிவுகளில் தொழில் தொடங்கலாம்.

இதற்கு 30 சதவீதம் மானியம் வழங்கப்படும். உழவர் நல சேவை மையங்கள் தொடங்க விருப்பமுள்ள வேளாண் பட்டதாரிகள், https://www.tnagrisnet.tn.gov.in/KaviaDP/register என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

இதுகுறித்த விவரங்களுக்கு அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவையாகா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

திருச்சி மாநகரின் சில பகுதிகளில் இன்று குடிநீர் விநியோகம் ரத்து

■ திருச்சி

திருச்சி மாநகராட்சி கம்பரசம் பேட்டை கலெக்டர் வெல் 2 நீரேற்று நிலையத்தில் இருந்து செல்லும் குடிநீர்க் குழாயில் குடமுருட்டி பாலம் அருகே ஏற்பட்டுள்ள உடைப்பை சரிசெய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக திருவெறும்பூர், வள்ளுவர் நகர், எல்லக்குடி, ஆலத்தூர், புகழ் நகர், காவேரி நகர், பாரி நகர், சந்தோஷ் நகர் ,கணேஷ் நகர், அம்பேத்கர் நகர், கீழ கல்கண்டார்கோட்டை ஆகிய பகுதிகளில் இன்று(ஆக.5) ஒருநாள் மட்டும் குடிநீர் விநியோகம் இருக்காது என மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் தெரிவித்துள்ளார்.

KVB கரூர் வைஸ்யா பேங்க் Smart way to bank

தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.
Asset Recovery Branch : R.S.எண்.170/9, மாட்டுத்தாவணி – மேலூர் ரோடு, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில், மதுரை – 625 107,
போன் : 0452–2587113, 2587112, மின்னஞ்சல் : kvbl1859@kvbmail.com

சுவாதீன அறிவிப்பு

(அசையா சொத்திற்காக)

பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 8(1)ன் கீழ் வழங்கப்பட்டது

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க (செகண்ட்) சட்ட ஷரத்துக்களின்படி (சட்டம் 54/2002) பிரிவு 13(12)ன் கீழ் மற்றும் விதி 3 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002ன் படியும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் கீழே கையொப்பம் செய்துள்ள, **கரூர் வைஸ்யா பேங்க் லிட்–ன்** அதிகாரபூர்வமான அலுவலரால் இவ்வங்கியிலிருந்து **கடன்தாரர்கள் : 1. M/s. பாலன் டெய்ரி, (கடன்தாரர்), (பிரதிநிதியாக அதன் ஏக உரிமையாளர் திரு. பாலக்கிருஷ்ணன். R),** SF எண்.715/8, M. புதுப்பட்டி, அழகாப்பட்டி சாலை, முசிறி – 621 211, **2. திரு. பாலக்கிருஷ்ணன். R, (உரிமையாளர்/கடன்தாரர்),** த/பெ. திரு. ரெங்கசாமி கோனார், எண்.4D, அந்தாரப்பட்டி வீதி, முசிறி – 621 211. **3. தினேஷ். B, (உத்தரவாதமளித்தவர்),** த/பெ. திரு. பாலக்கிருஷ்ணன். R, எண்.39/2, சிவகாமி நகர், T. பேட்டை சாலை, முசிறி – 621 211. **4. திரு. தினகரன். B, (உத்தரவாதமளித்தவர்),** த/பெ. திரு. பாலக்கிருஷ்ணன். R, எண்.39/2, சிவகாமி நகர், T. பேட்டை சாலை, முசிறி – 621 211 பெற்றுள்ள **06.05.2025** தேதியிட்ட நோட்டீஸில் சொல்லப்பட்டுள்ள **ரூ.43,60,107.84 (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து அறுபதாயிரத்து நூற்று ஏழு மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்)** நோட்டீஸ் கிடைத்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

கடன்பெற்றவர் மேற்கூறிய தொகையைச் செலுத்தத் தவறி விட்டதால், கடன்பெற்றவர் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், 2002 சர்பாசி சட்டப் பிரிவு 13(4) மற்றும் பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 8–ன் கீழ் அங்கீகாரம் பெற்ற அதிகாரி அவருக்குள்ள அதிகாரத்தின்படி, கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **04.08.2025** தேதியில் சுவாதீனம் செய்து கொண்டுவிட்டார்.

குறிப்பாக கடனாளர் மற்றும் பொதுமக்கள் இந்த சொத்து சம்பந்தமாக எந்தவித பேரங்களும் மேற்கொள்ள வேண்டாமென்றும், அப்படி ஏதாவது ஒப்பந்தங்களில் ஈடுபட்டால் அவை **கரூர் வைஸ்யா பேங்க் லிட்., முசிறி கிளை**யைக் கட்டுப்படுத்தாது எனவும், மேலும் வங்கிக்கு சேரவேண்டிய கடன் கணக்கிற்கான தொகை **ரூ.42,99,248.84 (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று நாற்பத்து எட்டு மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்)** மற்றும் **01.08.2025லிருந்து** தொடர்வட்டி, செலவுகள் சேர்ந்த தொகைக்கு கட்டுப்படுத்துவதாக இருக்குமென்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அட்டவணை சொத்து விபரம்

பகுதி – 'அ' சொத்து : திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் பதிவு மாவட்டம், முசிறி தாலூகா, முசிறி மேற்கு கிராமம் முசிறி நகரம் அந்தாரப்பட்டி ரோட்டில் பட்டா எண்.4183ன் படி மறு க.ச. எண்.70/15 A2ல் உட்பிரிவின் படியானது, இதன் க.ச.எண்.70/1ல் அடங்கிய 0 ஏக்கர் 50 சென்ட் விஸ்தீரண (21800 சதுர அடி) **நிலத்தின் எல்லைகள் கீழ்வருமாறு :–** ரோடு மற்றும் 'ஆ' பகுதி சொத்துக்கு வடக்கு, ராஜாராமன் நிலத்துக்குத் தெற்கு, அம்மாசை மற்றும் சந்தானத்துக்குச் சொந்தமாயிருந்து தற்போது செல்வியின் நிலத்துக்குக் கிழக்கு, சந்திரன் மனைக்கு மேற்கு.

பகுதி – 'ஆ' சொத்து : திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் பதிவு மாவட்டம், முசிறி நகரம், முசிறி மேற்கு கிராமம், க.ச. எண்.70/2F3, புதிய க.ச. எண்.70/2F3Bயில் உள்ள 0 ஏக்கர் 23 சென்ட் **நிலத்தின் எல்லைகள் கீழ்வருமாறு :–** கிருஷ்ணன் நிலத்துக்கு வடக்கு, ரோடு மற்றும் பகுதி'அ' சொத்துக்குத் தெற்கு, இலஞ்சியம் நிலத்துக்குக் கிழக்கு, சின்னக்குஞ்சு நிலத்துக்கு மேற்கு.

இடம் : மதுரை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி : 04.08.2025 — தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.

மஹிந்திரா ரூரல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
சாதனா ஹவுஸ், 2வது தளம், 570, P.B.மார்க், வோர்லி, மும்பை – 400 018, இந்தியா.

கோரிக்கை அறிவிப்பு

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்குபவர்கள் / இணை கடன் வாங்குபவர்கள் / உத்தரவாததாரர்கள் / அடமானம் வைப்பவர்கள் மஹிந்திரா ரூரல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்(MRHFL) நிறுவனத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்றுள்ளனர். MRHFL இலிருந்து நிதி உதவியைப் பெற்றிருந்தாலும், கடனாளிகள் / உத்தரவாததாரர்கள் / அடமானம் வைப்பவர்கள் நிலுவைத் தேதிகளின்படி வட்டி மற்றும் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் பல்வேறு தவறுகளைச் செய்துள்ளனர் என்று நாங்கள் கூறுகிறோம். MRHFL இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மூலமாக, இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சொத்து வகைப்பாடு தொடர்பான உத்தரவுகளின்படி, MHRFL புத்தகங்களில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த தேதிகளில் கணக்கு செயல்படாத சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது. நிதிச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 பாதுகாப்பு அமலாக்க விதிகள், 2002 இன் விதி 3 உடன் படிக்கப்பட்ட பிரிவு 13(12) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆகியவற்றின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த தேதிகளில் கோரிக்கை அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. SARFAESI சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ்க்கண்ட கடன் வாங்குபவர்கள் / சக கடன்தாரர்கள் / பொறுப்பு உறுதியாளர்கள் / அடமானம் வைப்பவர்கள் அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு அறிவிப்பு விடுக்கிறது. அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பணம் செலுத்தும் தேதி வரை. அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளில் அவர்களுக்கு வழங்கப்பட்ட நோட்டீஸ்கள் வழங்கப்படாமல் திரும்பிவிட்டதால், அதைப் பற்றி பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

வ.எண்.1: கடன் கணக்கு எண்.**XRESPDK00313247**, கடன்தாரர் / அடமானதாரர் 1. **திரு.ஆர்.கேட்டு**, எண்: 395, இருதரப்பட்டி, இலுப்பூர் தாலூக்கா, புதுக்கோட்டை இணை கடன் வாங்கியவர்கள்: **2.திருமதி.எஸ்.தெயலட்சுமி**, எண்: 395, இருதரப்பட்டி, இலுப்பூர் தாலூக்கா, புதுக்கோட்டை ஜாமீன்தாரர்: 3.**திரு.கே.மணி**, எண்: 395, இருதரப்பட்டி, இலுப்பூர் தாலூக்கா, புதுக்கோட்டை. கோரிக்கை அறிவிப்பு தேதி: 06.04.2022 கோரப்பட்ட தொகை: ரூ.4,43,159/- **கிளை: புதுக்கோட்டை**

அசையாச் சொத்தின் விபரம்: புதுக்கோட்டை பதிவு மாவட்டம், இலுப்பூர் துணைப் பதிவு மாவட்டம், இருதரப்பட்டி கிராமம், எஸ்.எஃப்.எண்.133/6, 133/7A2B நிலம் ஆகியவற்றில் அமைந்துள்ள சொத்தின் அனைத்துப் பகுதியும், கட்டிடத்துடன் கூடிய 0.16.0 Ares 40 சென்ட் பரப்பளவைக் கொண்டுள்ளது. மேற்கு:எம்.சுப்பிரமணியன், எம்.கணேசன் புஞ்சை, தெற்கு: எம்.சுப்பிரமணியன், எம்.கணேசன் புஞ்சை, வடக்கு: எம்.சுப்பிரமணியன், எம்.கணேசன் புஞ்சை சொத்து, கிழக்கு: எம்.சுப்பிரமணியன், எம்.கணேசன் புஞ்சை(பாதை)

வ.எண்.2: கடன் கணக்கு எண்.**XRESTPDK00611698** கடன்தாரர் / அடமானதாரர் 1. **திரு.டி.காளிமுத்து, எண்: 432, குளத்துவாய், சிங்கவனம்,** மணல்மேல்குடி, புதுக்கோட்டை - 614630. இணை கடன் பெற்றவர்கள்: 2.திரு.கே.உதயகுமார், 3.திருமதி.யு.சத்தியகலா, 4. திரு.கே.ராஜா, 5.திரு.கே.நாகம்மாள், மணல்மேல்குடி, புதுக்கோட்டை - 614630. ஜாமீன்தாரர்:: 6.திரு.பி.ஜேசுராஜ், எண்: 25, கொளந்திரம், மணல்மேல்குடி, மணல்மேல்குடி, புதுக்கோட்டை - 614630 கோரிக்கை அறிவிப்பு தேதி: **09.03.2023** கோரப்பட்ட தொகை: ரூ.2,10,472/- **கிளை: புதுக்கோட்டை**

அசையாச் சொத்தின் விபரம்: புதுக்கோட்டைப் பதிவு மாவட்டம், மணமேல்குடி துணைப் பதிவாளர் மாவட்டம், காரக்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ள சொத்தின் அனைத்துப் பகுதியும், பின்வரும் எல்லைக்குள் ச.எண்.56/8ல் உள்ள கட்டிடத்துடன் கூடிய 70 சென்ட் பரப்பளவைக் கொண்டுள்ளது. மேற்கு:கருப்பையாவின் நஞ்சை சொத்து, கிழக்கு: ரெத்தினசாமி & மெய்யக்கன்கோனார் சீனிவாசன் & சீதாலட்சுமி சொத்து, தெற்கு:அப்ஹாசன் சொத்து மற்றும் வழிப்பாதை, வடக்கு: ரெத்தினசாமி மெய்யக்கன் கோனார் ஸ்ரீனிவாசன் & சீதாலட்சுமி ஆகியோருக்கு சொந்தமான சொத்து.

மேற்கூறிய சூழ்நிலையில் மேற்படி கடன்தாரர், சக கடன்தாரர், பொறுப்புறுதியாளர் (எப்போதும் பொருந்தக் கூடிய இடங்களில்) கடன் நிலுவைத் தொகை, வருங்கால வட்டி மற்றும் பொருந்தக் கூடிய கட்டணங்களுடன் நோட்டீஸ் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இந்த நோட்டீஸ் வெளியிடப்பட்ட 60 நாட்களில் கடன்தாரர். சக-கடன்தாரர், பொறுப்புறுதியாளர் மற்றும் அடமானம் வைத்திருப்பவர் தொகையைச் செலுத்தத் தவறினால் நிதி சொத்துகளை பாதுகாத்தல், மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்க சட்டம் 2002 பிரிவு 13(4)ன் படி பாதுகாக்கப்பட்ட சொத்து சுவாதீனம் எடுக்கப்படும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 (13) இன் கீழ், எந்தவொரு கடனாளியும், பத்திரப்படுத்தப்பட்ட கடனாளியின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ள தனது பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறு வகையில் மாற்றக்கூடாது.

தேதி: 05.08.2025 — –ஒப்பம்–
இடம்: புதுக்கோட்டை — அதிகாரபூர்வ அதிகாரி, மஹிந்திரா ரூரல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

कर्मचारी भविष्य निधि संगठन
EMPLOYEES' PROVIDENT FUND ORGANISATION
(श्रम एवं रोजगार मंत्रालय, भारत सरकार)
MINISTRY OF LABOUR AND EMPLOYMENT, GOVT. OF INDIA
क्षेत्रीय कार्यालय / Regional Office, Chennai (North)
37, Royapettah High Road, Chennai - 600 014
Email: ro.chennai1@epfindia.gov.in/ Tele: 28139200/ Website: www.epfindia.gov.in

It has been decided to enter into an agreement with the Hospitals in Chennai who are empanelled under CGHS to extend cashless treatment facilities to the retired employees of EPFO (Inpatient treatment) and their dependent Family members at the rates prescribed by CGHS.

It is therefore appealed that those Hospitals who desire to enter into an agreement as mentioned above may submit their consent to the Regional P.F.Commissioner - I, EPF Organisation, No.37, Royapettah High Road, Royapettah, Chennai - 600014.

- Sd-
(L MANGAIYARKARASI)
REGIONAL P.F.COMMISSIONER-II (ADM)
REGIONAL OFFICE, CHENNAI (NORTH)

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: சர்வே எண்.140/3, நான்கு சாலை, BSNL அலுவலகம் எதிரில், பரமாத்திவேலூர், நாமக்கல், தமிழ்நாடு-638 182

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | கடன் நிலுவ